பக்கங்கள் நான்கு

Registered as a Newspaper

Edited (2)

அன்பளிப்பு

விலை
ரூபா
6-00

# உதயன்

சுடர் 10 வள்ளுவர் ஆண்டு 2026 கார்த்திகை 05 செவ்வாய்க்கிழமை (21-11-1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 351

# நாயன்மார்கட்டு பகுதியில் நேற்றிரவு படையினருடன் புலிகள் கடும் சமர்!

## தொடர் ஷெல் வீச்சால் யாழ். நகரம் அதிருகிறது

யாழ்ப்பாணம், நவம்பர் 21

கல்வியங்காட்டில் இருந்து நேற்று இரவு முன்னேறிய படையினரை வழிமறித்து விடுதலைப் புலிகள் கடும் சமர் புரிந்து வருகின்றர். நேற்றிரவு நாயன்மார்கட்டுப் பகுதியில் படையினருக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கடும் சண்டை நடந்ததாக களத்தில் இருந்து கடைசியாக கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

படையினருக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் பலத்த சண்டை நள்ளிரவுக்கும் பின்னும் தொடர்ந்தது.

படையினரின் தொடர்ச்சியான ஷெல்கள் நகர் எங்கும் விழ்ந்து வெடித்து பெரும் அதிர்வை ஏற்படுத்தின.

இதற்கிடையில் யாழ். நகரைக் கைப்பற்றுவதற்காக முன்னேறிச் செல்லும் 53 ஆவது படைப் பிரிவுக்கு முன்னாள் மணலாறு [வெலி

(4ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் கைப்பற்றிய ஆயுதங்கள்

யாழ்ப்பாணம், நவ. 21

மட்டக்களப்பு சந்திவெளிப் பகுதியில் ரோந்து சென்ற படையினர் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் படையினரிடம் இருந்துபெருந் தொகையான ஆயுதங்களைப் புலிகள் கைப்பற்றினர்.

அவற்றின் விவரம் வரு

(4 ஆம் பக்கம் பார்க்க)

## 2 அல்லது 3 தினங்களில் நகர் வீழ்ச்சி அடையுமாம்!

அடுத்த இரண்டு அல்லது மூன்று நாள்களில் யாழ். நகரம் ஸ்ரீலங்கா படையினரிடம் முற்றாக வீழ்ச்சி அடைந்துவிடும் என்று அகில இந்திய வானொலியின் கொழும்பு செய்தியாளர் கண்ணன் நேற்று இந்திய ரெலிவிஷனான தூரதர்ஷனுக்குத் தெரிவித்தார். (இ)

## 200 துருப்புகள் ஞாயிறன்று இழப்பு!

நேற்று முன் தினம் வலிகாமம் பகுதியில் நடந்த யுத்தத்தில் சுமார் இருநூறு துருப்புகளை ஸ்ரீலங்கா இராணுவம் இழந்திருக்கிறது.

நேற்று முற்பகல் பி. பி. ஸி. வெளியிட்ட செய்திக் குறிப்பு ஒன்றில் இத் தகவல் வெளியாகியுள்ளது. அச் செய்தியில் பி. பி. ஸியின் கொழும்புச் செய்தியாளர் ஜோர்ஜ் ஆர்னி தெரிவித்ததாவது;

ஞாயிற்றுக்கிழமை நடந்த சண்டையில் 100 படையினர்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மக்கள் வெளியேறியதால் அரசின் திட்டம் தோல்வி

### சண்டேரைம்ஸ் பாதுகாப்புச் செய்தியாளர் தெரிவிப்பு

கொழும்பு, நவ. 21

இராணுவ நடவடிக்கை ஆரம்பமான போது யாழ்ப்பாண மக்களை காப்பாற்றவே இந்த நடவடிக்கை என்று கூறப்பட்டது. பின்னர் அங்கு சிவில் நிர்வாகம் ஒன்றை ஏற்படுத்தவும் அவர்கள் திட்டமிட்டார்கள்.

அங்குள்ள மக்கள் வெளியேறியுள்ளதால் அரசின் இரு விடயங்களும் கை கூடமாட்டாது.

சண்டேரைம்ஸ் பாதுகாப்புச் செய்தியாளர் இக்பால் அத்தாஸ் நேற்று பி.பி.ஸிக்கு மேற்கண்டவாறு தெரிவித்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## நாவற்குழியில் நேற்று ஷெல்லுக்கு சிறுவன் பலி

நேற்றுக் காலை நாவற்குழி ஐடனார் முகாம் பகுதியில் வீழ்ந்து வெடித்த ஷெல்லுக்கு 5 வயதுச் சிறுவன் ஒருவர் பலியானார்.

அச்செழுவில் இருந்து இடம் பெயர்ந்து நாவற்குழியில் வசித்து வந்த ஐயாத்துரை மினிஸ்வரன் எனபவரே இறந்த சிறுவன் ஆவார்.

இச்சம்பவத்தில் காயமடைந்தோரில் இவரின் தாயாரும் அடங்கி உள்ளார். (இ-117-13)

## வடமராட்சி கரையோரப் பகுதி மீது நேற்றுக் காலை அகோர தாக்குதல்!

### கடற்படையினர் மூர்க்கம்

வடமராட்சி, நவ 21

வடமராட்சி கடலில் இருந்து நேற்றுக் காலை கரையோரப் பகுதிகள் மீது கடற்படையினர் அகோர ஷெல் மற்றும் பீரங்கித் தாக்குதல்களை நடத்தினர்.

காலை 6 மணிமுதல் 7 மணி வரை — சுமார் ஒரு மணி நேரமாக — நடத்தப்பட்ட இந்த தாக்குதலினால் கரையோரப் பகுதி குடியிருப்புகளுக்கு பலத்த சேதம் ஏற்பட்டிருக்கிறது.

காங்கேசன் துறையில் இருந்து வடமராடசி கடற்பகுதிக்கு வந்த கடற்படைத் தாய்க்கப்பலான வீரய்யாவில் இருந்தும் அதற்குப் பாதுகாப்பளித்து வந்த டோறா படகுகளில் இருந்துமே கரையோரப் பகுதிகள் மீது தாக்குதல் நடத்தப்பட்டது.

தொண்டமனாறு தொடக்கம் சக்கோட்டை வரையான கரையோரப் பகுதி முழுவதுமே தாக்குதலுக்கு இலக்கானது.

தொண்டமனாறு, கெருடாவில் மயிலியதனை, ஊரிக்காடு, ஆதிகோவிலடி, வல்வெட்டித்துறை ஊறணி, [illegible] ஆகிய இடங்களில் ஷெல்களும், பீரங்கிக் குண்டுகளும் சரமாரியாக விழ்ந்து வெடித்தன.

தாக்குதலை நடத்தி விட்டு மீண்டும் காங்கேசன் துறைக்குத் திரும்பிய இக்கடற்படை அணி திரும்பிச் சென்ற போதும் இதே பகுதிகள் மீது தாக்குதலை நடத்தியது.

கரையோரப் பகுதிகளில் இருந்து மக்கள் ஏற்கனவே இடம் பெயர்ந்து விட்டிருந்ததால் உயிர்ச் சேதங்கள் ஏற்படவில்லை.

வல்வெட்டித்துறைப் பகுதியில் தாக்குதலுக்கு இலக்காகி இருவர் காயமடைந்தனர்.

ஆதிகோவிலடியைச் சேர்ந்த வல்லிபுரம் சோதிலிங்கம் (வயது 65), சிவரத்தினம் சரோஜாதேவி (வயது 30) ஆகிய இருவருமே காயமடைந்தனர்.

கடற் பகுதியில் இருந்து

(4 ஆம் பக்கம் பார்க்க)

## 25 காவலரண்கள் வவுனியாவில் நிர்மூலம்!

### 3 படையினர் பலி! ஆயுதங்கள் மீட்பு

யாழ்ப்பாணம், நவ. 21

வவுனியா கணேசபுரம் பகுதியில் அமைந்திருந்த 25 தொடர் இராணுவக் காவலரண்களை நேற்று முன்தினம் அதிகாலை விடுதலைப் புலிகள் திடீர் தாக்குதல் நடத்தி முற்றாக அழித்தனர்.

இந்த தாக்குதலில் மூன்றுக்கு மேற்பட்ட படையினர் கொல்லப்பட்டனர். பெரும

(4 ஆம் பக்கம் பார்கக)

## பீரங்கித் தக்குதல்கள் நடந்த சமயம் ஷெல் வீச்சு

வடமராட்சி, நவ. 21

பலாலி முகாமில் இருந்து வடமராட்சிப் பகுதியை நோக்கி நேற்றுக் காலை ஷெல்தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

கடலில் இருந்து பீரங்கித் தாக்குதல்கள் நடத்தப்பட்ட சமயமே ஷெல்தாக்குதல்களும் நடத்தப்பட்டன.

ஷெல்கள் ஆதிகோவிலடி ஊறணி, சமரபாகு போன்ற இடங்களிலும் —

கரவெட்டி தல்லைப்புலம் பத்திரகாளி கோவில் பின்புறம், யாக்கரு பிள்ளையார் கோவில் பின்புறம் ஆகிய இடங்களிலுள்ள பனங்காணிகளிலும் வீழ்ந்து வெடித்தன.

ஆதிகோவிலடி, சமரபாகு, ஊறணி ஆகிய இடங்களில் மக்கள் இடம் பெயர்ந்ததால் உயிர்ச் சேதம் தவிக்கப்பட்டது. (இ-15-173)

## வடக்கிலிருந்து வவுனியா செல்வோர் மீது கெடுபிடி

### அகதி முகாமில் பதிய வேண்டுமாம்

கொழும்பு, நவ. 21

வடக்கில் இராணுவ கட்டுப்பாடற்ற பிரதேசங்களில் இருந்து வவுனியா செல்பவர்கள் தமது விவரங்களை வவுனியாவில் உள்ள அகதி முகாமில் பதியவேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி செயலணியிடம் வவுனியாவில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற சமயம்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## விமானம் ஒன்று இறங்கியது?

நேற்று வடமராட்சிப் பகுதியை நோக்கி பலாலி முகாமில் இருந்து ஷெல் தாக்குதலும் —

வடமராட்சிக் கடல் பகுதியில் இருந்து குடியிருப்புப் பகுதிகளை நோக்கி பீரங்கித் தாக்குதலும் — மேற்கொள்ளப்பட்ட சமயம் விமானம் ஒன்று பலாலி முகாமுக்குள் வந்திறங்கியதாகக் கூறப்படுகிறது. (இ-173)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

பத்மநாதன் சந்திரலீலா ஆகிய எனது அடையாள அட்டை, குடும்ப அட்டை, உலர்உணவு அட்டை, பேஸ் அடங்கிய லெதர் பாக் கேரதீவு நாவற்குழி பாடசாலைக்கும் சிறுவர் பூங்கா வீதிக்கும் இடையில் 19-11 95 இல் தவறிவிட்டது. எடுத்தவர்கள் சாவகச்சேரி பளை, தென்னைவள கூட்டுறவு சங்கம், டச்சு வீதியில் ஒப்படைக்கவும். (39262)

## சிமெந்து ஊழியர் கொடுப்பனவு

லங்கா சிமெந்து நிறுவன ஊழியர்களுக்கான செப்ரெம்பர், ஒக்ரோபர் மாதங்களுக்கான கொடுப்பனவுகள் காசோலையாக இன்று செவ்வாய்க்கிழமை தொடக்கம் வழங்கப்படும்.

நுணாவில் கனகம் புளியடி வீதியில், மட்டுவில் தெற்கு வேரங்கேணி கந்தசாமி கோவிலடி லெப். நடேசு வீதியில் (இலுப்பையடி வீதி) உள்ள வேலாயுதம் வீட்டில் (இராசபூபதி வாசா) வைத்து கொடுப்பனவுகள் வழங்கப்படும் என்று அறிவிக்கப்படுகிறது. (இ)

# பெரும் எண்ணிக்கையான மக்கள் வன்னிக்கு இடம் பெயர்கின்றனர்

யாழ்ப்பாணம், நவ. 21

தென்மராட்சி, வடமராட்சிப் பகுதிகளில் இருந்து பெரும் எண்ணிக்கையான மக்கள் கிளிநொச்சி மற்றும் வன்னிப் பகுதிகளுக்கு இடம் பெயர்ந்து வருகின்றனர்.

வலிகாமத்தில், யாழ்ப்பாண நகரைக் கைப்பற்றுவதற்கான போர் உக்கிரமடையும் போதும், படையினர் தரப்பிலான இழப்புகள் கூடும் போதும், தாம் முன்னேறுவது கஷ்டமாகும் போதெல்லாம் வடமராட்சி, தென்மராட்சி பகுதிகள் மீதான ஷெல், குண்டு வீச்சுத் தாக்குதல்களை இராணுவத்தினர் நடத்தி வருகின்றனர்.

இந்த நிலைமை யாழ்ப்பாணத்துக்கான போர் மிகத் தீவிரமடையும்போது மேலும் மோசமடையலாம் என்று கருதியும் மக்களில் பலரும் வன்னிப் பகுதிக்குப் போகிறார்கள்.

தென்மராட்சியிலும், வடமராட்சியிலும் மக்கள் சந்தைகள், பஸ் நிலையங்கள், வீதி ஓரங்கள் என்று பெருங்கூட்டமாக தங்கியிருப்பதால் —

அவர்கள் இடம்பெயர்ந்து வன்னிக்குச் செல்வதன் மூலம் பொதுமக்கள் தரப்பில் ஏற்படக்கூடிய உயிரிழப்புகளைத் தவிர்க்க ஏதுவாகும் என்றும் —

சன நெருக்கடியால் ஏற்படக்கூடிய தொற்று நோய் ஆபத்து மற்றும் சுகாதாரச் சீர்கேடுகளைத் தவிர்க்கலாம் என்றும் — அவதானிகள் கருதுகின்றனர்.

இவற்றைக் கருத்தில் கொண்டே இயன்றவரை கணிசமான எண்ணிக்கையினர் வன்னிக்குச் செல்லது நல்லது என்று தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் ஆலோசனை கூறுவதாக இயக்க வட்டாரங்கள் உதயனுக்குத் தெரிவித்தன.

வன்னிக்குச் செல்வோருக்கு காணித்துண்டுகள் வழங்கிக் குடியமர்த்தி அவர்கள் விவசாயத்தில் ஈடுபடுவதற்கான உதவிகளைச் செய்வதில் தொண்டர் நிறுவனங்கள் ஊக்கமாகச் செயற்பட்டு வருவதாகவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (அ)

## பிறவுண் வீதியில் காயமடைந்தவர்

யாழ்ப்பாணம், நவ. 21

யாழ். பிறவுண் வீதியில் கொக்குவில் பகுதியில் நேற்று முன்தினம் வீழ்ந்து வெடித்த ஷெல்லினால் ஒருவர் காயமடைந்தார்.

பொருள்களை எடுத்து வருவதற்காகச் சென்ற சித்தன்கேணியைச் சேர்ந்த பொன்னம்பலம் செல்வரஞ்சிதன் (வயது45) என்பவரே பிறவுண் வீதியில் சென்று கொண்டிருந்த சமயம் ஷெல்லினால் காலில் காயமடைந்தவர் ஆவார்.

இவர் பின்னர் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றார். (ஐ-3)

## நாவற்குழியில் காயமடைந்த 18 பேர் விவரம்

தென்மராட்சி, நவ. 21

நாவற்குழி ஐயனார் முகாம் பகுதியிலும், நாவற்குழி கேரதீவு வீதி பிள்ளையார் கோவிலடியிலும் நேற்று வீழ்ந்த, ஷெல்களால் காயமடைந்தோர் வருமாறு:-

ஐயனார் முகாம் பகுதி ஷெல்லினால் காயமடைந்தோர்:-

ஐயாத்துரை வசந்தா (வயது 40 —இவரின் 5 வயது மகனே ஷெல் வீச்சில் பலியானார்) பூபாலசிங்கம் ஈஸ்வரி (வயது 38) — இவர் மண் மூடப்பட்ட நிலையில் மீட்கப்பட்டார்) இவரது கணவன் சதாசிவம் பூபாலசிங்கம் (வயது 40), வினாசி பொன்னையா (வயது 64) இவரது பிள்ளைகளான பொன்னையா ரஜனிகுமாரி (வயது 15] பொன்னையா உதயசேகர் (வயது 14), ரவிச்சந்திரன் சாந்தினிதேவி (வயது 23) ஜோன் (வயது 52), தம்பிராசா ராஜினிதேவி வயது 24) — இவர் அச்செழுவில இருந்து இடம்பெயர்ந்தவர்) வரதராசா ஜெயந்தினி (வயது 26).

நாவற்குழி பிள்ளையார் கோவிலடியில் வீழ்ந்த ஷெல்லினால் காயமுற்றோர்:- நல்லூர் அரசடியைச் சேர்ந்த வல்லிபுரம் பொன்னுத்துரை (வயது 63) தர்மராசா ஜசிந்தா (வயது 24), சங்கானையைச் சேர்ந்த ஆனந்தன் புஷ்பதேவி (வயது 50) இராசசிறீதேவி (வயது 38). (இ-117)

## வல்வெட்டி ஷெல்லுக்கு ஒருவர் காயம்

யாழ்ப்பாணம், நவ. 21

வடமராட்சிப் பகுதியில் நேற்று முந்தினமும் ஷெல் தாக்குதல்கள் இடம்பெற்றன.

இந்த சம்பவத்தில் ஒருவர் காயமடைந்தார். பல வீடுகள் சேதமடைந்தன.

வல்வெட்டிப் பகுதியில் கணவதிப்பிள்ளை சின்னராசா (வயது58) என்பவரே காயமடைந்தவராவார்.

காயமடைந்தவர் வல்வெட்டித்துறை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ-10)

---

ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்கம்

## உடன் சந்திக்கவும்

திரு. கீரநாதன்

இராசவீதி நல்லூரைச் சேர்ந்த திரு. கீரநாதன் [வெதுப்பகக் கட்டுனர்] என்பவரை ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்க பொது முகாமையாளர் உடன் சந்திக்கும்படி கோருகிறார். திரு. கீரநாதன் எங்கிருந்தாலும் உடன் வந்து சந்திக்கவும்.

சந்திக்கவேண்டிய முகவரி:- ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்கம், தலைமை அலுவலகம், நவீன சந்தை மேல்மாடி, சாவகச்சேரி.

பொது முகாமையாளர்

[39261]

---

## உடன் சந்திக்கவும்

அளவெட்டியைச் சேர்ந்தவரும், நவாலியில் வசித்தவருமாகிய திரு. எஸ். பரமேஸ்வரன் என்பவரையும், கொக்குவில் மேற்கு மணியர்பதி வீதியைச் சேர்ந்த திருமதி பரமேஸ்வரி குலவீரசிங்கம் என்பவரையும் இலங்கை வங்கியைச்சேர்ந்த சி. செந்தில்நாதன் தேடுகின்றார்.

மே/பா சி. சிவநாதன் 114/1, கல்லடி ஒழுங்கை சாவகச்சேரி முகவரியில் உடன் சந்திக்கவும்.

(39259)

---

ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்கம்

## முக்கிய அறிவித்தல்

பங்கீட்டு அட்டைக்கான மாவு, மண்ணெண்ணெய் விநியோகம்

1. ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்க எல்லைக்குட்பட்ட மக்களுக்கான ''உ'' 'இ' பங்கீட்டட்டைகளுக்கான மாவு, மண்ணெண்ணெய் ஆகிய பொருள்கள் பணத்திற்கு நாவற்குழியில் அமைந்துள்ள கிளையிலும், நுணாவில், சந்தியில் அமைந்துள்ள கிளையிலும், சங்கத்தானை (சாவகச்சேரி) புகையிரத பாதையில் அமைந்துள்ள கிளையிலும் விநியோகிக்கப்பட்டு வருகின்றது. உடனடியாக தங்களுக்குரிய பங்கீட்டுப் பொருள்களைப் பெற்றுக்கொள்ளவும்.

பொது முகாமையாளர்

2. நெறியாளர் குழுக் கூட்டம் 25 - 11 - 95

மேற்படி ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்க நெறியாளர் குழுக் கூட்டம் சாவகச்சேரி நவீன சந்தை மேல்மாடியில் அமைந்துள்ள தற்காலிக தலைமை அலுவலகத்தில் 25-11-95 ஆம் திகதி சனிக்கிழமை காலை 11.00 மணிக்கு சங்கத் தலைவர் திரு. தி. சுந்தரலிங்கம் அவர்கள் தலைமையில் கூட்டப்படும். தவறாது சகல நெறியாளர் குழு உறுப்பினர்களையும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

தலைவர்.. செயலாளர்.

3. கிராமிய வங்கி நடவடிக்கைகள்

மேற்படி எமது சங்க கிராமிய வங்கியில் சகல நடவடிக்கைகளும் 27-11-95 ஆம் திகதி தொடக்கம் சாவகச்சேரி நவீன சந்தை மேல்மாடியில் அமைந்துள்ள கட்டிடத்தில் நடைபெறும். பரிசூதிய சேமிப்புத் திட்ட அங்கத்தவர்கள், கடன் பெற்றவர்கள் யாவரும் குறிப்பிட்ட இடத்தில் தொடர்பு கொள்ளவும்.

பொதுமுகாமையாளர்

4, சமையல்காரர் தேவை— ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்கம்

ஊர்காவற்றுறை ப. நோ, கூ. சங்க உணவகத்திற்கு சமையல்காரர் தேவை. தகுதியானவர்கள் சாவகச்சேரி நவீன சந்தையில் அமைந்துள்ள ஊர். ப.நோ.கூ. சங்க தலைமைக்காரியாலத்தில் தொடர்பு கொள்ளவும்.

பொது முகாமையாளர்

[39260]

---

## தேடுகின்றோம்

யாழ் - பிலிப்ஸ் முதியோர் இல்லத்தில் வசித்தவரும், குரும்பசிட்டியைச் சேர்ந்தவரும் ஆகிய

**திருமதி பூரணம் ஆறுமுகம்**

அவர்களை, அவரது மகன் தேடுகின்றார், வாய்ப்பு இருப்பின் பின்வரும் முகவரியுடைய இல்லத்திற்கு வந்தசேரவும்.

ஆ. மகாதேவன்

''தேவன் இல்லம்''
நெல்லியடி,
கரவெட்டி.

[39248]

---

## பலகை கொள்வனவு

தொகையாக பலகை வழங்கக்கூடிய வழங்குனர்களை சாவகச்சேரி நகரசபையில் அமைந்துள்ள யாழ். மாநகர சபை அலுவலகத்துடன் உடனடியாக தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

யாழ்' மாநகர ஆணையாளர்
சாவகச்சேரி

(39264)

---

## உடன் சந்திக்கவும்

யாழ். ஜீ. பி. எஸ். தொழிலாளர் கூட்டுறவு தொழிற்சங்கத்தின் இலிகிதர்

**சண்முகம் லோகேஸ்வரனை** [சண்டிலிப்பாய்]

மேற்படி சங்கத்தின் செயலாளரும், பொருளாளரும் சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் சந்திக்குமாறு வேண்டுகின்றோம்.

தகவல் :
செயலாளர்/பொருளாளர்

(39265)

---

## உடன் சந்திக்கவும்

த. பாலசுப்பிரமணியம் ''அம்பிகை வாசா'' சுழிபுரம் என்பவரை மைத்துனர் க. சிவகுருநாதன் அராலி கிழக்கு உடன் கீழுள்ள முகவரியில் சந்திக்கவும்.

**திரு. ப. குணரட்ணம்**

சோலை அம்மன் கோவிலடி (குணம் மில்)
மீசாலை.

(39298)

---

## அல்டி

யாழ்ப்பாணத்தில் இயங்கி வந்த எமது

''அல்டி'' நிறுவனம்

சாவகச்சேரி கண்டி வீதியில் பழைய நீதிமன்றம் முன்பாக] இடமாற்றம் செய்யப்பட்டு 20-11-95 திங்கள் முதல் இயங்கி வருகிறது என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகிறோம்.

(39262)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உ_தயன்

## உறுதி வேண்டும்

யாழ்ப்பாணத்தை மட்டுமே கைப்பற்றுவது என்பது எமது இறுதி நோக்கமல்ல. யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய பின்னர் புதியதொரு தாக்குதலை ஆரம்பிப்போம்.

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த.

யாழ்ப்பாணத்தை —யாழ். நகரத்தை — கைப்பற்றுவது என்பது மக்கள் இல்லாத ஒரு மனித சூனியப் பிரதேசத்தை ஆக்கிரமிப்பது என்ற கேலிக் கூத்தான விடயம் மட்டுமல்ல.

ஈழத் தமிழ் மக்களின் பாரம்பரிய தலைநகராக மட்டுமன்றி, அவர்களின் கல்வி, கலை, கலாசாரம் மற்றும் சிறப்பு மிகு விழுமியங்களின் உறைவிடமாகவும் விளங்கும் யாழ்ப்பாணத்தைச் சிதைத்து, நாசமாக்கி, அழித்து துவம்சம் செய்யும் நாசகார நோக்கம் கொண்டதும் ஆகும்.

யாழ்ப்பாணம் தமிழர் கையில் இருந்து சிங்களப் படைகளிடம் வீழ்வது என்பது, தமிழருக்கு எதிரான சிங்களவரின் வெற்றி என்று சிங்கள மக்களுக்குக் காட்டவே அனுருத்தவும், சந்திரிகாவும் முயல்கிறார்கள்.

அவ்வாறு செய்வதன் மூலம் தென்னிலங்கையில் பொருளாதார மற்றும் அதிகாரத்தனம் போன்றவற்றால் அரசுக்கு எதிராக வளர்ந்து வரும் அதிருப்தியை திசை திருப்ப முயல்கிறார்கள்.

எனவே யாழ்ப்பாணத்தை ஆக்கிரமிப்பதோடு மட்டும் அரசாங்கம் தனது போரினூடு சமாதானம் என்ற ஈனத்தனமான கோட்பாட்டுக்கு முற்றுப் புள்ளி வைக்கப் போவதில்லை.

யாழ்ப்பாணத்துக்கு அடுத்து குடாநாடு; குடநாட்டுக்கு அடுத்து வன்னிப் பிரதேசம்; வன்னிக்கு அடுத்து கிழக்குப் பிரதேசம் என்று தமிழர் தாயகம் முழுவதிலும் போரை நடத்தித் தமிழ் மக்களை அழித்தும், அவலப் படுத்தியும், சிதைப்பதே சந்திரிகா – ரத்வத்த மூளைகளின் திட்டம்.

அதாவது தமிழீழம் முழுவதிலும் இராணுவ ஆக்கிரமிப்பை விசாலிப்பதற்காக போரை விஸ்தரித்துத் தொடர்வதே அவர்களின் சூட்சுமம்.

விடுதலைப் புலிகளை வெல்ல முடியும் என்பதனை யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியதன் மூலம் நிரூபித்து விட்டோம். நாம் இராணுவ ரீதியாக மேலோங்கியே நிற்கிறோம். எனவே நாம் கொடுப்பதை அவர்கள் வாங்க வேண்டும். அதற்காக விடுதலைப் புலிகளைப் பேச்சுக்கு அழைப்போம் — என்ற திட்டமோ அன்றி எண்ணமோ கூட அரசிடம் இப்போது இருப்பதாக இல்லை.

அனுருத்த ரத்வத்தவின் கூற்று இந்த நிலைப்பாட்டையே உறுதி செய்கிறது.

அரசாங்கத்தின் போர் நடவடிக்கை தற்காலிகமானதோ அன்றி மட்டுப்படுத்தப்பட்டதோ அல்ல. தமிழர்களை இனப்படு கொலை செய்யும் தொடரான போராகவே அது இருக்கப்போகிறது.

ஆகையால் தமிழர்கள் பேச்சு, சமாதானம் என்ற சலனங்களுக்கு ஆட்படாமல் தம்மீது போர் தொடுத்துள்ள அரச படைகளுக்கு எதிராகப் போராட கிளர்ந்து எழவேண்டும். அதற்கான உணர்வினை வள்ர்த்து உறுதி தளராது நிற்கவேண்டும்.

# நகரை கைப்பற்றும் முயற்சியில்

# புதிதாக 53 ஆவது படையணி!

லண்டன், நவ. 21

யாழ். நகரை நோக்கிய படையினரின் முன்னேற்றத்தை விரைவுபடுத்தும் வகையில் 53 ஆவது படையணி புதிதாக ஈடுபடுத்தப்பட்டுள்ளது. அந்தப் படையணியில் கொமாண்டோக்களும், ''மொபைல் பிரிகேட்'' சிப்பாய்களும் உள்ளனர்.

—இவ்வாறு பி.பி.ஸி தெரிவித்தது.

பி. பி. ஸியின் கொழும்பு செய்தியாளர் ஜோர்ஜ் ஆர்னியின் கண்ணோட்டத்திலேயே இத்தகவல் தெரிவிக்கப்பட்டது.

யாழ். நகரை நோக்கிய முன்னேற்றத்தில் நல்லூர் பகுதியைக் கைப்பற்றியதாக பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்தனர்,

இது உறுதிப்படுத்த முடியாத முதல் கொண்டு கிடைத்த செய்தி.

இது குறித்து சுதந்திரமான தகவல்கள் எதுவும் கிடைக்கவில்லை.

படையினரின் முன்னேற்றத்துக்கு புலிகள் கடும் எதிர்ப்பை காட்டி வருகிறார்கள்.

— இவ்வாறு ஜோர்ஜ் ஆனி தெரிவித்தார்.

யாழ். நகரைக் கைப்பற்றும் முயற்சியில் 51, 52 ஆவது படையணிகளை ஸ்ரீலங்கா இராணுவம் ஈடுபடுத்தியிருந்ததாக முன்னர் செய்திகள் வெளியாகியிருந்தது தெரிந்ததே. (உ-இ-3)

## அரச படைகளும் புலிகளும் போரை நிறுத்த வேண்டும்

### வாசுதேவ கூறுகிறார்

கொழும்பு, நவ. 21

'தற்போது நடைபெறும் அர்த்தமற்ற யுத்தத்தை நிறுத்த ஸ்ரீலங்கா அரசாங்கமும், விடுதலைப் புலிகளும் முன்வரவேண்டும்.'

இப்படி அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் இரத்தினபுரி நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார கோரிக்கை விடுத்துள்ளார்.

தற்போது நடை பெறும் யுத்தம் மூலம் நாட்டில் நிலவும் தேசிய பிரச்சினைக்கு தீர்வு காணமுடியாது. பேச்சு மூலமே இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண முடியும்.

தற்போது நடக்கும் யுத்தம் அர்த்தமற்றது.

யுத்தத்தை உடன் நிறுத்த அரசும், விடுதலைப் புலிகளும் முன்வந்து பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டும் —

இப்படி அவர் கூறினார். (இ-3)

## ஜி,சீ.ஈ. பரீட்சை திட்டமிட்டபடி நடக்கும்

கொழும்பு, நவ. 21

ஜி.சீ.ஈ. (சாதாரணம்) பரீட்சையும், 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையும் திட்டமிட்டபடி அடுத்த மாதம் நடைபெறவிருப்பதாக பரீட்சை ஆணையாளர் நேற்று அறிவித்துள்ளார். [இ-3]

## ஷெல் அதிர்ச்சி: பனையிலிருந்து விழ்ந்து காயம்

தென்மராட்சி. நவ. 21

கள் எடுப்பதற்காக பனையில் ஏறியவர் ஷெல் வெடித்த அதிர்ச்சியில் கைதவறி நிலத்தில் வீழ்ந்து படுகாயமடைந்தார்.

இச்சம்பவம் கடந்த ஞாயிற்றுக் கிழமை மட்டுவில் சந்திரபுரத்தில் நிகழ்ந்தது.

நாகன் திருநாவுக்கரசு (வயது 37) என்ற இவர் மந்திகை ஆஸ்ப்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ-117)

## டாக்டர்கள் பற்றாக்குறை

தென்மராட்சி, நவ 21

பளை அரச வைத்தியசாலையில் டாக்டர்களுக்கு பற்றாக்குறை நிலவுவதால் நோயாளர்கள் பெரும் சிரமத்துக்கு உள்ளாகின்றனர்.

இந்த வைத்திய சாலை வெளிநோயாளர் பிரிவுக்குத் தினமும் 750 க்கு மேற்பட்ட நோயாளர்கள் சிகிச்சை பெற வருகிறார்கள். ஆனால் இரு டாக்டர்களே கடமையாற்றுகின்றனர். (இ-117)

## வியாபாரிமூலை பகுதியில் இருவர் காயம்

வடமராட்சி, நவ. 21

பருத்தித்துறைப் வியாபாரி மூலைப் பகுதியில் கடந்த சனிக்கிழமை நண்பகல் 1.30 மணியளவில் சுப்ப சொனிக் விமானம் நடத்திய குண்டு வீச்சுத் தாக்குதலில் வைரவநாதன் யசோதரன் (வயது 4), செல்வச்சந்திரன் குணசுந்தரி (வயது 35) ஆகிய இருவரும் காயமடைந்தனர்.

சுப்பசொனிக் வீசிய குண்டுகள் பனங்காணி ஒன்றுக்குள் வீழ்ந்ததால் பல பனைகள் முறிந்து நாசமாகின. கால் நடைகள் பல உயிரிழந்தன. (உ-9-173-15)

## போரிட்டு ஊருக்குப் போவோம்!

மாரிமழை பொழியும் மாதம்
வழியெங்கும்;
ஊறி நிலம் நனைந்து உளது.
அடுப்பெரிக்க
விறகெடுத்தால்... ஈரம்.
விடிகாலை சென்றாற்தான்
அரை றாத்தல் பாண் கையில் அகப்படும்.
பிள்ளைக்குக்
காய்ச்சல்; வயிற்றோட்டம்
கடவுளே! இப்படியோர்
மாய்ச்சல் இனியெந்த மனுஷனுக்கும் வரவேண்டாம்.
தூரத்துறவொருவன் தோப்பில்
சிறு கொட்டில்
பேருக்கு வீடென்று போட்டுள்ளேன்.
கிணறில்லை,
கக்கூசும் இல்லை, கையிலொரு சதமில்லை
தெற்கேது; வடக்கேது தெரியவில்லை
மனைவிக்கு;
பெறுமாதம் ''தை''
அவளைப் பேணுதற்கும் தாயில்லை.
அறுதாலிக் கோலம்... அவள் கழுத்துத் தாலியதும்
விற்றாச்சு.
இனியேதும் விற்பதற்கும் கையிலில்லை.
கற்பனையிற்கூடக் காணாத துன்பமிது.
என்றாலும் நான் கலங்கேன்.
என் மகனும்
சென்றானாம் புலிக்கென்றோர் சேதி.
அவனெனது
ஊர்மனையை மீட்பான் உறுதியிது.
முற்றத்தில்
பூமலரும்; நாளை புதுவாழ்வு வந்தடையும்.
ஆம்; எனது வீட்டில் ஆடும் சிறு ஏணை
எந்தச் சிறுபொருளும் எடுக்காது வந்திங்கு
அந்தரித்த வாழ்வில் அகப்பட்டேன்.
என்றாலும்...
நம்பிக்கை நெஞ்சில் நாற்றங்கால் போட்டுளது.
வீட்டுக்குப் போவேன் விரைவில்...
என மனசு
ஏற்றும் ஒளிக்கீற்று இருள் கரைத்து நிற்கிறது.
புலிவீரர் வெல்வார். பொல்லாப்பு ஏதுமின்றி
வலிகொண்ட வேங்கை வரலாற்றை வென்றெடுக்கும்.
''கலிவீழும்''
எந்தன் கையளைந்த மண்மீதில்...
போயிருக்கும் காலம் புலரும்.
மாமரத்தின்
காய் பழுக்கமுன்னம் கட்டாயம் எந்தனது
தாய் வீடடில் என்பிள்ளை தவழ்வான்.
வீட்டுக்கு
ஒருவர் விடுதலைக்காய் எழுந்தால்...
எதிரிகளைக்
கருவறுத்து நாங்கள் கால் நடந்து ஊர்புகலாம்.
ஊர்நின்றெரிக்கும் உலுத்தர்படை சிதறும்.
போரழித்து எதிரிக்குப் ''பிணமென்று பேரிடலாம்''
வாருங்கள்; ஊர்திரும்ப வழியிதுதான்.
வேறுவழி
தேடுவதால் ஒன்றும் செல்லாது.
படைபெருக்கிப்
போரிட்டு ஊருக்குப் போவோம்.
தமிழனென்ற
பேருக்கும் இதுதானே பெரும் அழகு
வாருங்கள்!

— புதுவை இரத்தினதுரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சரஸ்வதி நவரத்தினம்

சித்தங்கேணியைப் பிறப்பிடமாகவும் சங்கானையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி நவரத்தினம் அவர்கள் கொழும்பில் காலமாகிவிட்டார்.

இவர் ஆறுமுகம் நவரத்தினம் அவர்களின் அன்பு மனைவியும், திருமதி சிவராஜேஸ்வரி, காலஞ்சென்ற இலங்கைநாதன் மற்றும் திருமதி இரத்தினேஸ்வரி திருமதி சிவனேஸ்வரி, சற்குணநாதன் (லேக்ஹவுஸ் உற்பத்தி முகாமையாளர் - கொழும்பு), பரமநாதன் (நிரஞ்சனாஸ் சித்தங்கேணி), திருமதி ஞானேஸ்வரி, ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற சிவராஜேஸ்வரன், மற்றும் திருமதி நாகபூசணி, சிவானந்தன் (மகாராசா நிறுவனம் - கொழும்பு), நவரத்தினம்(கரன் நிறுவனம்), திருமதி விஜயகுமாரி, திருமதி யசோதரா, கணேசலிங்கம், (ஓமான்) ஆகியோரின் அன்பு மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இல. 6, பௌண்டின் கவுஸ் ஒழுங்கை கொழும்பு 10 என்ற விலாசத்திலுள்ள இல்லத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார். உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மே/பா
வை. இராசரத்தினம்
"சக்தி"
தபாற்கந்தோர் வீதி,
சாவகச்சேரி.

தகவல்:-
ந. பரமநாதன்
(மகன்)

(39250)

## சோமசுந்தரக்குருக்கள் சீதாராமக்குருக்கள்

(நுணாவில்குளம் முருகன் கோவில் பிரதமகுரு)

சோமசுந்தரக்குருக்கள் சீதாராமக்குருக்கள் நேற்று (20-11-1995) திங்கட்கிழமை காலமானார்.

இவர் செல்லம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற வைத்தியநாதன், நாகபூஷணி, கிரிதரன், பரணீதரசர்மா ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற பரமேஸ்வரசர்மா (ஆசிரியர்), கௌரி மனோஹரி, பூலோகநாயகி ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற தியாகராஜக்குருக்கள், சுப்பிரமணியக்குருக்கள், ராமச்சந்திரக்குருக்கள், யோகாம்பாள் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காயத்திரி, கஜேந்திரன், வைஷ்ணவி, விஷ்ணுவர்த்தன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21-11-95) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் 2-00 மணிக்கு நடைபெறும்.

தகவல்:
சீ. பரணீதரசர்மா
(மகன்)

"பரணி வீடியோ",
கைதடி, நுணாவில்,
சாவகச்சேரி.

(39249)

## திருமதி பர்வததேவி ஞானசேகரம்

அளவெட்டி பெருமாக்கடவையை பிறப்பிடமாகக் கொண்டவரும், தற்போது சரசாலை தெற்கில் வசித்தவருமாகிய பர்வததேவி ஞானசேகரம் அவர்கள் 20-11-95 திங்கட்கிழமை மாலை 4-30 மணிக்குக் காலமாகிவிட்டார்.

அன்னார் ஞானசேகரத்தின் (இளைப்பாறிய உதவி நிர்வாக உத்தியோகத்தர், சுகாதாரத் திணைக்களம்) அன்பு மனைவியும், [Dr. நா. மயில்வாகனம் Rtd. R. M. P. பேராதனை], திருமதி விசாலாட்சி-முத்தையா (சிறம்பான் மலேசியா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், திருமதி திருவருட்செல்வி-மயில்வாகனத்தின் மைத்துனியும். செல்விகள் பிருந்தா, சுமேதா ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 21-11-95 காலை 10 மணிக்கு திரு. ப. சூரியகுமாரன் [கமலாசினி ஒழுங்கை, சரசாலை] யில் நடைபெற்று, பூதவுடல் வேம்பிராய் மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க. ஞானசேகரம்
[கணவன்]

(39352)

## சிலுவேஸ்திரி ஞானமுத்து

(இரத்தினம்)

வசாவிளானை பிறப்பிடமாகக் கொண்ட சிலுவேஸ்திரி ஞானமுத்து (இரத்தினம்) நேற்று (20.11.95) காலமானார்.

இவர் மாக்கிறேஸின் அன்புக் கணவரும், ஜெயக்குமார், ஜீவமேரி, அமலமேரி, செல்வமேரி, செல்வக்குமார், சந்திரகுமார், வசந்தமேரி, ரட்ணமேரி ஆகியோரின் பாசமிகு தந்தையுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (21-11-1995) காலை 8-00 மணியளவில் சாவகச்சேரி லிகோரியர் தேவாலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, சாவகச்சேரி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் ஏற்றுகொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

யாகப்பர் தேவாலயம்,
மிருசுவில்.

# யாழ். நகரைக் கைப்பற்றினாலும் அது இனப்போருக்கு முடிவாகாது

### சரத் முனசிங்க கூறுகிறார்

கொழும்பு, நவ. 21

யாழ். நகரைப் படையினர் கைப்பற்றினாலும் அது இனப்போருக்கு ஒரு முடிவாகாது.

இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சரத்முனசிங்க இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

"கிறிஸ்ரியன் மொனிட்டர்" வானொலிக்கு அதன் கொழும்புச் செய்தியாளர் அனுப்பிய செய்தியில் இத்தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

ஐந்து ஆண்டுகளுக்குப் பின்னர் யாழ். நகருக்குள் பிரவேசிக்கும் வாய்ப்பு ஸ்ரீலங்காப் படைகளுக்கு கிடைத்திருப்பதாகவும் அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

## வடமராட்சி. .

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

படையினர் தாக்குதல் நடத்திய அதேவேளை பலாலி முகாமில் இருந்தும் வடமராட்சி வடக்கு கரையோரப் பகுதிகள் மீது ஆட்லறி ஷெல் தாக்குதல்கள் மேற் கொள்ளப்பட்டன.

நேற்றைய தாக்குதல்களை அடுத்து கரையோரப் பகுதிகளில் இருந்து மேலும் பெரும் எண்ணிக்கையான மக்கள் இடம் பெயர்ந்து சென்றனர்.

(ஐ-15-80-173)

## நாயன்மார்கட்டு ..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஓயா] தளபதி ஜானக பெரேரா தமை வகிப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வலிகாமம் மேற்குப் பகுதியிலும் வலிகாமம் கிழக்குப் பகுதியிலும் இருந்து இருமுனைகளில் 'முன்னேறிச் செல்லும் 51 ஆவது, 52 ஆவது படைப்பிரிவுகளின் நடவடிக்கையை விரிவுபடுத்துவதற்காக இந்த 53 ஆவது படையணி களத்தில் இறங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

நேற்று நடந்த சண்டையில் ஓர் அதிகாரி உட்பட 5 படையினர் கொல்லப்பட்டனர் என்றும்—

3 அதிகாரிகள் உட்பட 30 படையினர் காயமடைந்தனர் என்றும் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்தது.

(இ-ஐ-3)

## மக்கள்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தார்.

யாழ்ப்பாணத்தை பிடிக்க முன் பேச்சுவார்த்தைக்கு அரசு வேண்டுகோள் விடுக்கும் என்று கொழும்பு பத்திரிகைகள் தெரிவித்தன.

ஆனால் பேச்சுக்கள் ஆரம்பிக்கும் என்ற நிலை இல்லை என்றே கூற வேண்டும் என்றும் இக்பால், அத்தாஸ் தெரிவித்தார்:

யாழ் நோக்கிச் சென்று கொண்டிருக்கும் படையினர் இன்று அல்லது நாளை யாழ்ப்பாணத்தைப் பிடிப்பார்கள் என்று அரசு எதிர்பார்க்கிறது நாளை நல்ல நாள் என்று அரசு தெரிவித்துள்ளது.

பிடிக்கும் யாழ்ப்பாணத்தை தக்க வைப்பதில் பிரச்சினை உள்ளது என்றும் அவர் கூறினார். (இ-3)

## வடக்கிலிருந்து...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பான முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக அரசு தெரிவித்துள்ளது.

வவுனியா ரயில் நிலையத்துக்கு முன்பாக உள்ள அகதி முகாமில் தமது விவரங்களை பதிவு செய்து, பத்திரம் பெறுபவர்களே கொழும்பு செல்ல அனுமதிக்கப்படுவர் என்று தெரிவிக்கப்படுகிறது.

(இ-3)

## 200 துருப்புகள்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொல்லப்பட்டோ அல்லது காயமடைந்தோ உள்ளதாக இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர் ஆனால் இந்த இழப்பு அரசு கூறியதிலும் பார்க்க இருமடங்காக இருக்கும் என்று வேறு தகவல்கள் [illegible] தெரிவித்தார். (இ-3)

# இறுதி வீரவணக்கமும் வித்துடல் விதைப்பும்

யாழ்ப்பாணம், நவ. 21

ஸ்ரீலங்காப் படையினரின் "சூரியப்பிரகாசம்" நடவடிக்கையின்போது வீரச்சாவைத் தழுவிக்கொண்ட வீரவேங்கை குகன் (சின்னத்துரை ரமேஷ், சிறீமுருகன் பாடசாலையடி, ஏழாலை தெற்கு, மயிலங்காடு) வீரவேங்கை தங்கப்பன் (சற்குணலிங்கம் வினோதரன் இந்து மகளிர் ஒழுங்கை, கந்தர்மடம்) ஆகியோரின் வித்துடல்கள் இன்று 21 ஆம் திகதி பி.ப. 3 மணிவரை பெற்றோரின் வருகைக்காகத் தென்மராட்சிக் கோட்டச் செயலகத்தில் வைக்கப்பட்டிருக்கும்.

அதன் பின்னர் அங்கிருந்து கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு மக்களின் இறுதி வீரவணக்கத்திற்காக வித்துடல்கள் வைக்கப்பட்டிருக்கும்.

அதனைத் தொடர்ந்து இறுதி வீரவணக்கக் கூட்டம் நடைபெற்று அங்கிருந்து அணிவகுப்பு மரியாதைகளுடன் வித்துடல்கள் கொடிகாமம் மாவீரர் துயிலும் இல்லம் எடுத்துச் செல்லப்பட்டு அங்கு இறுதி இராணுவ மரியாதைகளுடன் புனித விதை குழிகளில் விதைக்கப்படும்.

## 25 காவலரண்கள்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ளவு ஆயுத தளபாடங்களை விடுதலைப் புலிகள் கைப்பற்றினர்.

இத் தாக்குதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் கப்டன் நிரோஜன் அல்லது நிரே (சிதம்பரப்பிள்ளை சற்குணராஜா — முல்லைத் தீவு) என்ற போராளி வீரச்சாவடைந்தார்.

புலிகள் கைப்பற்றிய ஆயுத தளபாடங்கள் விவரம் வருமாறு:-

ஏ. கே. துப்பாக்கி — 03, 60 மி. மீ. ஷெல் — 24, 60 மி. மீ. பூஸ்ரர், பெட்டி— 03. 60 மி. மீ. ஸ்கோப் — 01, ஏ. கே. மகஸின் — 22, ஐ. எம். ரவை — 8, 550, ஐ. எம். ரவை லிங்குடன்— 500, கிரனேட்— 10, ஏ கே, எல். எம். ஜி. றம் மகஸின் — 04 (ஐ-9)

# படைக்கு ஆள் திரட்ட நடவடிக்கை

கொழும்பு, நவ. 21

ஸ்ரீ லங்கா படைகளுக்கு அவசரமாக ஆட்களைச் சேர்ப்பதற்கான நேர்முகப் பரீட்சைகள் இன்றும் நாளையும் கொழும்பில் நடைபெற உள்ளன.

நேர்முகப் பரீட்சைக்கான விண்ணப்பங்களை இன்று காலை இராணுவத் தலைமையகத்தில் கையளிக்குமாறும்—

நேர்முகப் பரீட்சை இன்று நண்பகல் முதல் நடைபெறும் என்றும்— அரசு அறிவித்துள்ளது. (இ-3)

## மட்டக்களப்பில்...

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மாறு:-

ஏ.கே.எல் எம்.ஜி -5, 60 எம்.எம். மோட்டார் -1 ஏ. கே. துப்பாக்கி-28, ஏ.கே. எல்.எம்.ஜி. றம் மகஸின் -8 60 எம். எம். மோட்டார் வைபோட் -1 60 எம். எம். பேஸ்பிளேட் -1 60 எம்.எம். ஷெல் -4 ஏ.கே.மகஸின் -54 கிரனேட் -5 ஐ எம். ரவை -1885 ஐ. எம். ஆமட்பியரிங் ரவை -40 ஐ.எம்.ரவை லிங்குடன் -1082 (ஐ-9)

# மரண அறிவித்தல்

## திருமதி தியாகராசா மங்களநாயகி

(ஓய்வுபெற்ற ஆசிரியை)

இருபாலை கற்பகப்பிள்ளையார் கோவிலடியைப் பிறப்பிடமாகவும், மிருசுவில் படித்த மகளிர் திட்டத்தில் வசித்து வந்தவருமான திருமதி மங்களநாயகி (ஓய்வுபெற்ற ஆசிரியை) அவர்கள் 20-11-95 அன்று இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற தியாகராஜா (ஓய்வு பெற்ற ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும், தி. பொன்னம்பலநாதன் (ஓய்வுபெற்ற வெளிக்கள உத்தியோகத்தர், சுகாதாரத் திணைக்களம்), ஜெய்குமாரன் (ஆசிரியர், உரும்பிராய் சுந்திரோதய வித்தி) திருமதி தியாகசொரூபிணி (நைஜீரியா), திருமதி செல்விகாராணி (நிர்வாக உத்தியோகத்தர் நீர்வேலி ப. நோ. கூ. ச.), திருமதி மீனலோசனி (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள், இன்று (21- 11- 95) செவ்வாய்க்கிழமை காலை 10 மணியளவில் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
தி. பொன்னம்பலநாதன்
(மகன்)

திருமதி. புஸ்ப்லீலாவதி பொன்னம்பலநாதன்
(ஆசிரிய ஆலோசகர் - இசை, மருமகள்)

இல: 59,
படித்த மகளிர் திட்டம்,
மிருசுவில்.

(39351)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் சாவகச்சேரி, சரசாலை தெற்கில் உள்ள அவர்களது தற்காலிகப் பணிமனையில் 21-11-95 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org